திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையர் (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு.சு.பிரபாகரன்,பி.இ.,

நக.எண்.1863/2024/எப்1 நாள். 28.06.2024

பொருள்: மனைப்பிரிவு - திருத்துறைப்பூண்டி நகராட்சி – வார்டு-ஏ, பிளாக்-1, ந.அ.எண்-10/9ஏ ல் 4000.ச.மீ பரப்பிற்கு அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் திருவாரூர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது - இறுதி ஒப்புதல் வழங்குவது – தொடர்பாக.

பார்வை:

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் திருவாரூர் அவர்களின் கடிதம் நக.எண் 27773/2024 /TVR நாள் 24.05.2024.
2. திருமதி.என்.முத்துலெட்சுமி, எண்-287/143, வெட்டுகுளம், மன்னை சாலை,, திருத்துறைப்பூண்டி என்பவரின் விண்ணப்பம், நாள்.11.06.2024.
3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் திருவாரூர் அவர்களின்கடிதம் நக.எண்.27773/2024/TVR/Dated.07.06.2024, உடன் இணைத்து வரப்பெற்ற மனைப் பிரிவு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு ம.வ./ம.ந.ஊ.அ.(TVR) SWP எண்.42/2024க்கான வரைபடம்.
4. இந்நகர்மன்ற தீர்மான எண்-376. நாள்.28.06.2024.

-oOo-

உத்தரவு:

திருத்துறைப்பூண்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட மன்னை சாலை, வார்டு ஏ, பிளாக்-4, ந.அ.எண்-10/9ஏ ல் 4000.ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் பார்வை1ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் திருவாரூர் அவர்களின் கடிதத்தின்படி சாலை அமைப்பு ஒப்புதல் பெறப்பட்ட உத்தேச வரைபடத்தில் கண்டுள்ள உள்ளாட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய சாலைகள், பூங்கா மற்றும் மூலை முடக்குகள்ஆகிய வற்றுக்கான இடத்தினை ஆணையர் பெயருக்கு இனாம் சாசனம் மூலம் ஆவணம் பத்திரபதிவு செய்து பார்வை 2ல் காணும் கடிதத்தின் படி மனைப்பிரிவின் உரிமையாளராள் மேற்கண்ட ஒதுக்கீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் இனாம் சாசன ஆவணத்தின் மூலம் ஆணையர் பெயருக்கு பத்திரப் பதிவு செய்து பெறப்பட்டது. அதனைத்தொடர்ந்து பார்வை 3ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருவாரூர் அவர்களின் கடிதத்துடன் உத்தேச மனையிடத்தில் அமையும் மனைப் பிரிவிற்கு ம.வ./ம.ந.ஊ.அ (TVR) SWP எண்.42/2024என எண்ணிட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கி, மனைப் பிரிவுக்கான வரைபடம் மற்றும் நிபந்தனைகள் நகராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு வரப்பெற்றுள்ளது. எனவே மனைபிரிவு அமையும் இடத்திற்கான ஆவணங்களை, மேற்கண்ட

தொழில் நுட்ப அனுமதியோடு ஒப்புநோக்கப்பட்டதில் சரியாக உள்ளது, மற்றும் மனைப்பிரிவு உரிமையாளரால் அடிப்படைவசதிகள் அனைத்தும் மேம்பாடு செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை 4ல் காணும் இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானத்தின்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளதின் அடிப்படையிலும், மேற்கண்ட மனைப் பிரிவிற்கு இதன் மூலம் இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

20/8/24

ஆணையர்(மு.கூ.பொ),
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

20.8.24

இணைப்பு:
மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள் 1 செட்

பெறுநர்
திருமதி.என்.முத்துலெட்சுமி, எண்-287/143, வெட்டுகுளம், மன்னை சாலை,, திருத்துறைப்பூண்டி

நகல்: நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருவாரூர், அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் சார்பதிவாளர், திருத்துறைப்பூண்டி

நகல் நகர்மன்ற தலைவர், திருத்துறைப்பூண்டி நகராட்சி.

நகல் ஆணையர்/பொறியாளர்/ மேலாளர், திருத்துறைப்பூண்டி நகராட்சி

நகல் வருவாய் ஆய்வாளர், திருத்துறைப்பூண்டி நகராட்சி,(காலிமனை வரி விதிப்பு செய்ய)

நகல் காசாளர், திருத்துறைப்பூண்டி நகராட்சி,(தானப்பத்திரம் செக்யூரிட்டி ரிஜிஸ்டரில் பதிவு செய்ய)

நகல் நகரமைப்பு ஆய்வாளர், திருத்துறைப்பூண்டி நகராட்சி.